## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.237/2013 c/w அ.வ.எண்.62/2014

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 01.06.2026 |
| **பெயர்** | **பாஸ்கர்** |
| **த/பெ** | **வீரராகவன்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.40 p.m**

**குறுக்கு விசாரணை–**

1. என் வயது 45. இவ்வழக்கில் ஜோதி எனபவர் என் மனைவி ஆவார். எந்த வருடம் எங்களுக்குதிருமணம் ஆனது என்றால் 2004 ல். எனது சொந்த ஊர் முகப்பேர் மேற்கு. நான் பிறந்து வளர்ந்தது மேலகோட்டையூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம். எனது மனைவி பொன்னேரி தாலுக்கா, வன்னிப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என் மனைவி எனக்கு அசல் தான் சொந்தமல்ல. திருமணம் ஆனபிறகு தான் இந்த ஊருக்கு நான் வந்து செல்வேன். அதனால் வழக்கு சொத்தில் என்ன நடந்தது என்றவிவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அனைத்து விவரங்களும் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனது மாமியாரான முனியம்மாள் என்கிற முருகா கூறியதின் பெயரில் தெரியும். எனது மாமியார் 2004 ல் திருமணம் ஆனபோது கூறினாரா அல்லது 2013 ல் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது கூறினாரா என்றால் வழக்கு சொத்தில் எந்த பிரச்சனையும் இல்லை.

2. இந்த வழக்கினை குமார் என்கிற முனிக்குமார் என்பவர் எனது மனைவி, மாமியார் மைத்துனரின் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் வழக்கு சொத்து குறித்தும் நானும் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குமார் என்கிற முனிக்குமார் மீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு

எண்.62/2014 ல் குமார் என்கிற முனிக்குமார் என்பவர் பெயரில் மட்டும் தாக்கல் செய்யவில்லை அவருடன் சேர்ந்து எனது மாமியாரான முருகா என்கிற முனியம்மாள் பெயரிலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது எனது மாமியார் இறந்துவிட்ட காரணத்தினால் அவரின் வாரிசுகளையும் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அதில் எனது மனைவியும் ஒரு வாரிசு என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவரை அந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்.

3. குமார் என்கிற முனிக்குமார் என்பவர் தாக்கல் செய்த வழக்கில் நான் எனது மாமியார் என்னுடைய மனைவி மற்றும் மைத்துனர் அனைவரும் சேர்ந்து தான் பதிலுரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். குமார் என்கிற முனிக்குமார் தாக்கல் செய்தபிறகு நான் என்னுடைய வழக்கை தாக்கல் செய்துள்ளேன் இந்த இடைப்பட்ட காலத்தில் எனக்கும் என்னுடைய மாமியாருக்கும் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. முதலில் குமார் என்கிற முனிக்குமார் தாக்கல் செய்த வழக்கில் நான் என் மாமியாருடன் சேர்ந்து அந்த வழக்கில் பிற பிரதிவாதிகளுடன் சேர்ந்து பதிலுரை தாக்கல் செய்துவிட்டு பிறகு நான் தாக்கல் செய்த வழக்கில் ஏன் எனது மாமியாரை பிரதிவாதியாக காண்பித்து பின்பு ஒரு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனது மாமியாரை அந்த ஆவணத்தை குமார் என்கிற முனிக்குமாருக்கு எழுதி கொடுத்ததால் அவரை பிரதிவாதியாக காண்பித்து வழக்கை தாக்கல் செய்தேன்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 03.49 p.m.**

<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**</u>

**<u>அ.வ.எண்.236/2013 c/w அ.வ.எண்.61/2014</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** 01.06.2026

**பெயர் பாஸ்கர்**

**த/பெ வீரராகவன்**

**சாட்சி DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.50 p.m**

**<u>குறுக்கு விசாரணை –</u>**

1. என் வயது 45. இவ்வழக்கில் ஜோதி எனபவர் என் மனைவி ஆவார். எந்த வருடம் எங்களுக்குதிருமணம் ஆனது என்றால் 2004 ல். எனது சொந்த ஊர் முகப்பேர் மேற்கு. நான் பிறந்து வளர்ந்தது மேலகோட்டையூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம். எனது மனைவி பொன்னேரி தாலுக்கா, வன்னிப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என் மனைவி எனக்கு அசல் தான் சொந்தமல்ல. திருமணம் ஆனபிறகு தான் இந்த ஊருக்கு நான் வந்து செல்வேன். அதனால் வழக்கு சொத்தில் என்ன நடந்தது என்றவிவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அனைத்து விவரங்களும் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனது மாமியாரான முனியம்மாள் என்கிற முருகா கூறியதின் பெயரில் தெரியும். எனது மாமியார் 2004 ல் திருமணம் ஆனபோது கூறினாரா அல்லது 2013 ல் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது கூறினாரா என்றால் வழக்கு சொத்தில் எந்த பிரச்சனையும் இல்லை.

2. இந்த வழக்கினை முனிநாதன் வகையறா எனது மனைவி, மாமியார் மைத்துனரின் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் வழக்கு சொத்து குறித்தும் நானும் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முனிநாதன் வகையறா மீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.61/2014 ல் முனிநாதன் வகையறா என்பவர் பெயரில் மட்டும் தாக்கல் செய்யவில்லை அவருடன் சேர்ந்து எனது மாமியாரான முருகா என்கிற முனியம்மாள்

பெயரிலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது எனது மாமியார் இறந்துவிட்ட காரணத்தினால் அவரின் வாரிசுகளையும் வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அதில் எனது மனைவியும் ஒரு வாரிசு என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவரை அந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்.

3. முனிநாதன் வகையறா தாக்கல் செய்த வழக்கில் நான் எனது மாமியார் என்னுடைய மனைவி மற்றும் மைத்துனர் அனைவரும் சேர்ந்து தான் பதிலுரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். முனிநாதன் வகையறா தாக்கல் செய்தபிறகு நான் என்னுடைய வழக்கை தாக்கல் செய்துள்ளேன் இந்த இடைப்பட்ட காலத்தில் எனக்கும் என்னுடைய மாமியாருக்கும் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. முதலில் முனிநாதன் வகையறா தாக்கல் செய்த வழக்கில் நான் என் மாமியாருடன் சேர்ந்து அந்த வழக்கில் பிற பிரதிவாதிகளுடன் சேர்ந்து பதிலுரை தாக்கல் செய்துவிட்டு பிறகு நான் தாக்கல் செய்த வழக்கில் ஏன் எனது மாமியாரை பிரதிவாதியாக காண்பித்து பின்பு ஒரு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனது மாமியாரை அந்த ஆவணத்தை கேசவலு நாயுடு பெயரில் எழுதி கொடுத்ததால் அவரது வாரிடுசுகளான முனிநாதன் வகையறாவை பிரதிவாதிகளாக காண்பித்து வழக்கை தாக்கல் செய்தேன்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 03.58 p.m.**